திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்டத்தை சென்னையிலும், மதுரையிலும் நடத்துகிறார்கள். அதற்காக வருடத்திற்கு 15 லட்சம் ரூபாய் வரையில் செலவிடப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குழந்தைகள் அதிகமாக இருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திலேயும் இந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்துமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் குடும்பக் கட்டுப்பாட்டை மீறுகிறார்கள் என்று தான் அர்த்தம்.

திரு. பி. துரைராஜ் : ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்திலே சங்கரன்கோவில் தொகுதியில் வாழும் மக்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள், ஆகவே, ஆங்கே இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தற்போது 1982-83 ஆம் ஆண்டு, 1983-84 ஆம் ஆண்டுகளில் இந்தத் திட்டம் 36 இடங்களில் செயல்படுத்தப்படுவது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருச்சியில் உள்ள கோழி உற்பத்தி கழகத்திற்கு சொந்தமான குளிர்சாதன கிடங்கு.

* வினா எண். 496—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோழி உற்பத்தி கழகத்துக்கு சொந்தமாக திருச்சியில் உள்ள குளிர் சாதன கிடங்கு பயன்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : திருச்சியிலிருந்து குளிர்சாதன இயந்திரம் பழுதடைந்திருந்ததால் அங்குள்ள குளிர் சாதனக் கிடங்கு செயல்படவில்லை. அந்த இயந்திரம் சென்னை அடையாறிலுள்ள முட்டை விற்பனைப் பிரிவிற்குக் கொண்டு வரப்பட்டு பழுது பார்க்கப்பட்டு 17—2—1982 முதல் செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.